6937

# Peace Trust

Near Police Colony, Trichy Road, Dindigul - 624 005
Tamilnadu, India. Ph: +91451 - 2410021, Fax: +91451-2410372,
email: peacetrust@sify.com, Internet: www.peacetrust.in

**Regional Resource Agency for NEAC - Ministry of Environment and Forest, Government of India.**

TAMILNADU TEACHERS EDUCATION ... 13 AUG 2012

**Date:** 04.08.2012

## பல்லுயிரியம் குறித்த சிறப்பு அறிவியல் தொடர்வண்டி கண்காட்சி

அன்புடையீர்!

அமைதி அறக்கட்டளையின் வாழ்த்துக்கள் !!!

தேசிய சுற்றுச்சூழல் தினம் தொடர்பாக ஜீன் 5 முதல் டிசம்பர் 22, 2012 வரை இந்தியா முழுவதும் அறிவியல் தொடர்வண்டி 16 குளிர்சாதன பெட்டிகளைக் கொண்ட இரயிலில் சுற்றுச்சூழல் சார்ந்த நிகழ்வுகளை காட்சிபடுத்துதல், ஆடியோ-வீடியோ மற்றும் கருத்து பரிமாற்ற கருவிகள் மூலம் பல்லுயிரியம் குறித்த கருத்துக்களை விளக்குகின்ற வகையில் நாடெங்கும் பயணிக்கின்றது.

ஐக்கிய நாடுகளின் பல்லுயிர்ச் சூழல் பொதுப்புரிதல் ஒப்பந்தம் (UN Convention on Biological Diversity – CBD) உள்ளிட்ட பல்வேறு பொதுப்புரிதல் ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. பல்லுயிர்ச்சூழல் மற்றும் பாலைவனங்கள், பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகளின் பத்தாண்டுகள் என்று 2011 துவங்கி 2020 வரையிலான ஆண்டுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. பல்லுயிர்ச்சூழல் பற்றிய பொதுப்புரிதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகளின் (Conference of the Parties – CoP-11) 11 வது உலகக் கூட்டத்தினை 8-19 அக்டோபர் 2012ல் இந்தியாவின் ஹைதராபாத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டம் பல்லுயிச்ச்சூழலில் அனைத்து அம்சங்களையும் பரிசீலிக்கும்.

மாநாடு நடைபெறும் போது அறிவியல் எக்ஸ்பிரஸ் என்னும் தொடர்வண்டி கண்காட்சியானது பல்லுயிரியம் கருத்தை அடிப்படையாக கொண்டு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் முன்முயற்சியினால் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் (MoEF) மற்றும் இந்திய அரசும் இணைந்த கூட்டுமுயற்சியாக செயல்படுகிறது. உலகில் உள்ள உயிரினப் பல்வகைமையின் பரவலாக்கம், உயிரினங்களின் பாதுகாப்பு (பல்லுயிர் பெருக்கம் மற்றும் பாதுகாப்பு) குறித்த காலநிலை மாற்றம், நீர், எரிசக்தி பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் மரபுரிமை அம்சங்களை பாதுகாப்பது ஆகிய நோக்கங்களை அறிவியல் தொடர்வண்டி எடுத்துரைக்கிறது.

இதுவரை நான்கு கட்டங்களாக பயணம் செய்த அறிவியல் தொடர் வண்டியானது நாடுமுழுவதும் 68,000 கி.மீட்டருக்கும் மேல் பயணித்து 801 கண்காட்சி நாட்களில் 220 இடங்களில் பார்வைக்காக நிறுத்தபபட்டு 63.60 லட்சம் பார்வையாளர்கள் பார்வையிட்ட இந்தியாவின் மிக நீண்ட, அதிகம் பேர் பார்வையிட்ட அறிவியல் தொடர்வண்டி இதுவாகும். இப்பொழுது 5வது கட்டமாக பல்லுயிரியம் குறித்த அறிவியல் எக்ஸ்பிரஸ் நாடு முழுவதும் பயணித்து தமிழ்நாட்டில் மூன்று இடங்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை அனைவரது பார்வைக்காக நிறுத்தப்படுகிறது.

| வ.எண் | நாள் | இடம் |
|---|---|---|
| 1 | 11.08.2012 முதல் 15.08.2012 வரை | சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் |
| 2 | 16.08.2012 முதல் 19.08.2012 வரை | மதுரை கூடல் நகர் இரயில் நிலையம் |
| 3 | 20.08.2012 முதல் 23.08.2012 வரை | கன்னியாகுமரி இரயில் நிலையம் |

அறிவியல் தொடர்வண்டி கண்காட்சியானது பொதுமக்கள் அனைவருக்காகவும், குறிப்பாக பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காகவும் மேற்காணும் அட்டவணைப்படி பார்வைக்காக நிறுத்தப்படுகிறது. இந்த பல்லுயிரியம் குறித்த சிறப்பு அறிவியல் தொடர்வண்டி கண்காட்சியை பார்த்து பயன்பெறுமாறும் தங்கள் தொடர்பில் உள்ள நிறுவனங்களை பார்வையிட அறிவுறுத்துமாறும் தங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

மேலும் விபரங்களுக்கு....
அலைபேசி - 95009 52032
மின்அஞ்சல் – neac@peacetrust.in
என்ற முகவரியில் தொடர்புகொள்ள வேண்டுகிறோம்.

4.8.2012
ஜே. பால்பாஸ்கர்,
தலைவர்
அமைதி அறக்கட்டளை.

**Tamilnadu ( South ): Covered Districts**
**Kanya Kumari, Tirunelveli, Tuticorin, Virudhunagar, Ramanathapuram, Sivagangai, Madurai, Thirupur, Theni, Dindigul, Karur, Coimbatore, Nilgiri, Trichirapalli, Pudukottai, Thanjavur, Tiruvarur, and Nagapattinam.**